4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2015

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11-40

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் ஒரே தலைவி, மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனிதப் பிறந்த நாள் நாளை வர இருக்கிறது. அந்தப் பிறந்த நாளிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொண்டர்களின் சார்பாக பல்லாண்டு பல்லாண்டு வாழ நாங்கள் கடவுளைப் பிரார்த்திக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் முதல்வருடைய பிறந்த நாள் ஏழைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது. வருகின்ற காலத்திலே அனைத்து மக்களுடைய பிரார்த்தனையும் நிறைவேறி, கண்டிப்பாக, கூடிய விரைவிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீண்டும் தமிழகத்தினுடைய அரியணை ஏறுவார்கள் என்றும், இந்த அவையை அலங்கரிப்பார்கள் என்றும் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

***திரு. க. பாலகிருஷ்ணன்:** *இச்சட்டமுன்வடிவை அறிமுக நிலையில் எதிர்க்கின்றோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, அது பதிவு செய்யப்படுகின்றது. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதமும் பதிலுரையும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது கொடுக்கப்பட்ட திருத்தங்கள் இன்று முன்மொழியப்பெற்று, வழிமொழியப் பெற வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. குணசேகரன் அவர்கள்.

திரு. கு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. காவேரி டெல்டா மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் மீத்தேன் வாயு எடுக்கும் திட்டத்தை தமிழக அரசு இரத்து செய்வது குறித்தும்;